# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

| தேர்வுக் குறியீட்டு எண்: **01/2015**<br>( விளம்பர எண்: **1/15** ) | தேதி: **08.02.2015** |
|---|---|

பிரிவு - **I**

இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்காணும் தகுதிகள் பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து காவல் சார்பு ஆய்வாளர் (தாலுகா) பதவிக்கான நேரடித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் 10.03.2015 வரை வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | பணியின் பெயர் | காலியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| சார்பு ஆய்வாளர் (தாலுகா) | தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி | 984 + 94 பின்னடைவுக் காலியிடங்கள் (Backlog vacancies - காவல்துறைப் பணியாளர்களைச் சார்ந்த பெண் வாரிசுகளுக்கான ஒதுக்கீடு) | 9300-34800+4800 (தர ஊதியம்) |

**2.** முக்கிய தேதிகள்:-

| | | | |
|---|---|---|---|
| i) | அறிவிப்பு நாள் | | 08.02.2015 |
| ii) | இணையதள விண்ணப்பம் துவங்கும் நாள் | | 08.02.2015 |
| iii) | இணையதள விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | | 10.03.2015 |
| iv) | எழுத்துத் தேர்வுக்கான தேதி | பொது ஒதுக்கீடு | 23.05.2015 |
| | | காவல்துறைக்கான ஒதுக்கீடு | 24.05.2015 |

**3.**தகுதிகள்:-

அ) வயது:

விண்ணப்பதாரர் 01.07.2015 அன்று 20 வயது நிறைவுற்றவராகவும் மற்றும் 28 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். [01.07.1987 அன்று அல்லது அதற்கு பின்னர் பிறந்தவராகவோ, 01.07.1995 அன்று அல்லது அதற்கு முன்னர் பிறந்தவராகவோ இருத்தல் வேண்டும்]. சில பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வகுப்புவாரி பிரிவு | வயது வரம்பு |
|---|---|---|
| i) | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | 30 வயது |
| ii) | ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் | 33 வயது |
| iii) | முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப் படையினர் (பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மிகையாகமல் இருக்க வேண்டும்) | 45 வயது |

| | | |
|---|---|---|
| iv) | ஆதரவற்ற விதவை | 35 வயது |
| v) | 20% காவல்துறையினருக்கான ஒதுக்கீடு விண்ணப்பதாரர் (08.02.2015 அன்று 5 வருடங்கள் காவல் துறையில் பணிபுரிந்திருக்க வேண்டும்) | 45 வயது |

குறிப்பு:- பொது ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் காவல்துறையினர், பொது விண்ணப்பதாரர்களுக்கு தேவையான வயது வரம்பு இருக்கவேண்டும்.

**B)** கல்வித்தகுதி:-

i. பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தில் படிப்பினை முடித்து இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ii. விண்ணப்பதாரர், அறிவிப்புத் தேதியான 08.02.2015 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இளங்கலைப் பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும்.

iii. இளங்கலைப்பட்டம் கீழ்க்காணும் முறையில் பெற்றிருக்க வேண்டும்.

a) இளங்கலைப் பட்டம் பள்ளியிறுதித் தேர்வு (10-ஆம் வகுப்பு) மற்றும் மேல்நிலைக் கல்வித் (12-ம் வகுப்பு) தேர்வு, ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பின்னரே பெற்றிருக்க வேண்டும் (10+2+3 முறை) அல்லது

b) இளங்கலைப்பட்டம் பள்ளியிறுதித் தேர்வு (10-ஆம் வகுப்பு) மற்றும் பட்டயப்படிப்பு (Diploma) தேர்ச்சி பெற்ற பின்னரே பெற்றிருக்க வேண்டும் (10+3+3/10+3+2 முறை) அல்லது

c) இளங்கலைப்பட்டம் திறந்தவெளிப் பல்கலைக்கழகம்/ தொலைதூரக்கல்வி/ கல்லூரி மூலமாக பெற்றிருப்பின், பள்ளியிறுதித் தேர்வு மற்றும் தொழில்நுட்ப பயிற்சி (I.T.I) தேர்ச்சி பெற்ற பின்னரே பெற்றிருக்க வேண்டும் (10+2+3 முறை)

iv. விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு அல்லது இளங்கலைப் பட்டப்படிப்பில் தமிழை ஒரு மொழிப்பாடமாகப் படித்திருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலைத் தமிழ்த்தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும்.

**4.** ஒதுக்கீடுகள் **:-**

**A.** வகுப்புவாரி இடஒதுக்கீடு கீழக்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பொதுப்பிரிவினர் | **31%** |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | **26.5%** |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | **3.5%** |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | **20%** |
| ஆதிதிராவிடர் [ஆதிதிராவிடர் (அருந்ததியர்) உள்ஒதுக்கீடு 3%] | **18%** |
| பழங்குடியினர் | **1%** |

குறிப்பு:- சாதி மற்றும் உட்சாதி விவரங்கள் பிற்சேர்க்கை-I ல் கொடுக்கப்பட்டுள்ளன.

B. மொத்தக் காலிப்பணியிடத்தில் 30% பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படும். மீதமுள்ள 70% காலிப்பணியிடத்தில் போட்டியிடவும் பெண் விண்ணப்பதாரர்கள் தகுதியுடையவர்களாவர்.

**5.** சிறப்பு ஒதுக்கீடு

சிறப்பு ஒதுக்கீடு விவரங்கள் பின்வருமாறு:-

| ஒதுக்கீடு | மொத்த காலிப்பணியிடங்களில் ஒதுக்கீட்டு சதவீதம் | தகுதிகள் |
|---|---|---|
| காவல்துறைக்கான ஒதுக்கீடு | 20% | தமிழ்நாடு காவல் சார்நிலை பணி விதிகள் 14ல் உள்ள தகுதியினை கொண்ட காவலர் முதல் தலைமைக் காவலர் பதவி நிலையில் உள்ளவர்கள். |
| சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீடு | 10% | காவல்துறையைச் சார்ந்த பணியிலுள்ள / ஓய்வுபெற்ற / மரணமுற்ற மற்றும் மருத்துவரீதியான இயலாமையால் ஓய்வு பெற்ற களப்பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் பணியிலுள்ள அமைச்சுப்பணியாளர்களின் வாரிசுகள் |
| விளையாட்டுக்கான ஒதுக்கீடு | 10% | அங்கீகரிக்கப்பட்ட 14 விளையாட்டுப் போட்டிகளில் தேசிய / மாநில / பல்கலைக்கழகம் சார்பாக இவ்விளம்பரம் வெளியிட்ட நாளுக்கு முன் 5 ஆண்டுகளுக்குள் கலந்து கொண்டவர்கள். |

குறிப்பு:-

i. சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் நிரப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில் அக்காலிப்பணியிடங்கள் பொதுப்பிரிவினரைக் கொண்டு நிரப்பப்படும்.

ii. ஒவ்வொரு ஒதுக்கீட்டின்கீழும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி வகுப்புவாரி ஒதுக்கீடு பின்பற்றப்படும்.

**A. 20%** காவல்துறைக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கான தகுதிகள்:-

i. காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் மற்றும் இதே பதவி நிலையில் சேமநலப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரிபவர்கள் தமிழ்நாடு சார்நிலைக் காவல் பணி விதிகள் 1953-ல் விதி 14-ல் உள்ள தகுதிகளைக் கொண்டவர்களாக இருப்பின் காவல்துறைக்கான 20% இடஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

   a. இவ்விண்ணப்பதாரர், அறிவிப்புத் தேதி அன்று 5 வருடங்கள் காவல்துறையில் பணி நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

   b. காவல்துறைக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் கரும்புள்ளி (Black Mark), வசவு (Reprimand) மற்றும் கண்டனம் (Censure) ஆகியவற்றைத் தவிர பிற தண்டனை பெற்றிருக்கக் கூடாது.

ii. தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அல்லது சேமநலப்படையில் தற்போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருபவர்கள் பொது ஒதுக்கீடு விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளனைத்தும் கொண்டவர்களாக இருப்பின் அவர்கள் பொது ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கலாம். ஆனால் இவர்கள் காவல்துறைக்கான 20% இடஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவார்கள்.

iii. காவல்துறைக்கான 20% ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிப்பவர்கள், காவல்துறை பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசு ஒதுக்கீடு மற்றும் விளையாட்டு ஒதுக்கீடு ஆகிய சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் போட்டியிட தகுதியற்றவராவர்.

iv. காவல்துறைக்கான 20% ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிப்பவர்கள் பொது ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளனைத்தும் கொண்டவர்களாக இருந்தால் அவர்கள் பொது ஒதுக்கீட்டின்கீழும் விண்ணப்பிக்கலாம். இவர்கள் தனித்தனியாக இரண்டு நாட்களில் நடத்தப்படும் இரண்டு எழுத்துத்தேர்வுகளிலும் கலந்துகொள்ள வேண்டும்.

v. காவல்துறைக்கான ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் காவல் கண்காணிப்பாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவிநிலை கொண்ட அதிகாரியிடமிருந்து முறையான படிவத்தில் பெற்ற “தடையில்லாச் சான்றிதழை” பதிவேற்றம் செய்ய வேண்டும். (See Reference Documents)

vi. காவல்துறைக்கான ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு உடற்கூறு அளத்தல் மற்றும் உடற்திறன் போட்டிகளில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்கள் சான்றிதழ் சரிபார்த்தல் மற்றும் உடற்தகுதித் தேர்வில் கலந்துகொள்ள வேண்டும்.

**B.** 10% விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கான தகுதிகள்:-

**10%** விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் (ஆண்/பெண்) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள 14 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பங்கேற்றதற்கான படிவம்-I / படிவம்-II / படிவம்-III-ஐ அறிவிப்பு தேதிக்கு (08.02.2015) முன்னர் 5 ஆண்டுகளுக்குள் (அதாவது 08.02.2010 க்குப்பிறகு) பெற்றிருக்க வேண்டும்.

| படிவத்தின் பெயர் | பங்கு கொண்ட நிலை | சான்றிதழ் வழங்கிய அலுவலர் |
|---|---|---|
| படிவம் I | பன்னாட்டு போட்டிகள் (நாட்டின் சார்பாக) | செயலாளர், தேசிய விளையாட்டு கூட்டமைப்பு |
| படிவம் II | தேசிய அளவிலான போட்டிகள் (மாநிலம் சார்பாக) | செயலாளர், தேசிய விளையாட்டு கூட்டமைப்பு அல்லது செயலாளர், மாநில விளையாட்டு அமைப்பு |
| படிவம் III | பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகள் (பல்கலைக்கழகம் சார்பாக) | பல்கலைக்கழக முதல்வர்/ இயக்குநர் அல்லது விளையாட்டு பொறுப்பு அதிகாரி |

*அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்*:-

1. கூடைப்பந்து, 2. கால்பந்து, 3. ஆக்கி, 4. கையுந்துப்பந்து, 5. கைப்பந்து, 6. கபடி, 7. மல்யுத்தம், 8. குத்துச் சண்டை, 9. ஜிம்னாஸ்டிக்ஸ், 10. ஜூடோ, 11. பளு தூக்குதல், 12. நீச்சல் போட்டி, 13. தடகளப் போட்டிகள், 14. குதிரையேற்றம்.

குறிப்பு:-

i. விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு,சான்றிதழ் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு மற்றும் உடல்திறன் போட்டி தேர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும்.

ii. விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மேற்சொல்லப்பட்ட 14 போட்டிகளில் சோதனைத்தேர்வு ஏதும் நடத்தப்படமாட்டாது.

iii. விளையாட்டிற்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்து, தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வு செய்யப்பட்ட பிறகு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி முன்னுரிமை பெறுவர்.

a. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.

b. பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.

c. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
d. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.
e. பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
f. பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.

iv. விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் தேர்ச்சி பெறுபவர்கள் ஒரே வகுப்பைச் சார்ந்தவராகவும் மற்றும் ஒரே மதிப்பெண்ணும் பெற்றிருந்தால் வயது அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**C)** 10% வாரிசுதாரர்களுக்கான இடஒதுக்கீடு:-

i. மொத்த காலிப் பணியிடத்தில் 10% ஒதுக்கீட்டில், 9% காவல்துறையில் பணியிலுள்ள/ஓய்வு பெற்ற/ மரணமடைந்த / மருத்துவரீதியான இயலாமையினால் ஓய்வு பெற்ற களப்பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசுகளைக்கொண்டு நிரப்பப்படும் மற்றும் 1% பணியிலுள்ள காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசுகளைக் கொண்டு நிரப்பப்படும்.

ii. பிற அரசுத்துறையில் பணிபுரியும் பணியாளர்களைச் சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கு இந்த ஒதுக்கீடு கிடையாது.

iii. சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ் முறையான படிவத்தின்படி, அறிவிப்புத் தேதிக்குப் பின்னர் பெற்றிருக்க வேண்டும். பிற தேர்வுகளுக்காக பெறப்பட்ட பழைய சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (See Reference Documents)

iv. முறையான படிவத்தில் சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழைப் பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர் பொது விண்ணப்பதாரராகக் கருதப்படுவார்.

v. ஏற்கனவே மத்திய / மாநில அரசில் பணிபுரியும் வாரிசுதாரர்கள் இவ்வொதுக்கீட்டின்கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

vi. சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டின்கீழ் நிரப்பப்படாத காலிப்பணியிடங்கள் பொது ஒதுக்கீட்டின்கீழ் நிரப்பப்படும்.

6. சிறப்புப் பிரிவிற்கான சலுகைகள்:-

**A)** முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர்:-

i. வயது தளர்வு:- அதிகபட்ச வயது 45 வருடங்கள். இவ்விண்ணப்பதாரர்கள் அறிவிப்பு தேதிக்கு முன்னர் 3 ஆண்டுகளுக்குள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். விடுவிக்கப்பட்டதற்கான சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ii. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு கிடையாது. ஆனால் அவர்களும் பொது விண்ணப்பதாரர்களை போலவே, அசல் சான்றிதழ் சரிபார்த்தல், உடல்தகுதித் தேர்வு, உடற்திறன் போட்டிகள் மற்றும் நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டும்.

**B)** ஆதரவற்ற விதவைகள்**(Destitute Widow) :-**

i. வயது தளர்வு:- அதிகபட்ச வயது 35 வருடங்கள்

ii. இவ்விண்ணப்பதாரர்கள், விண்ணப்பிக்கும் போது ஆதரவற்ற விதவை என்பதற்கான “ஆதரவற்ற விதவை” சான்றிதழை வருவாய்க் கோட்டாட்சியர் (**RDO**)- சார் ஆட்சியர் (**Sub-Collector**)/ துணை ஆட்சியர் **(Deputy Collector)**- அவர்களிடமிருந்து உரிய படிவத்தில் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் விண்ணப்பிக்கும்போது “ஆதரவற்ற விதவை” சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

7. விண்ணப்பிக்கும் முறை:-

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை இணையதளவழி **www.tnusrbexams.net** மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கலாம். மற்ற முறையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. அழைப்புக் கடிதத்தை பதிவிறக்கம் செய்யும் முறை:-

வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளை நிறைவு செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு அடுத்த கட்ட எழுத்துத் தேர்வுக்கான அழைப்புக் கடிதத்தை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான தகவல் விண்ணப்பதாரரின் கைப்பேசி மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அளிக்கப்படும். இத்தகவலைப் பெற்ற பின் தங்களது பதிவுஅடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி **www.tnusrbexams.net** இணையதளத்தில் சென்று அழைப்புக் கடிதத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். காவல்துறையைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள், காவல்துறைக்கான 20% ஒதுக்கீடு மற்றும் பொது ஒதுக்கீடு ஆகிய இரண்டு தேர்வுகளிலும் கலந்துகொள்பவாராக இருப்பின், இரண்டு அழைப்புக் கடிதங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## பிரிவு - II

**1.** தேர்வு நிலைகள்:-

i. தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.
ii. எழுத்துத்தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் மொத்த காலிப்பணியிடங்களுக்கு 1:5 (மொத்த காலிப்பணியிட எண்ணிக்கையில் 5 மடங்கு விண்ணப்பதாரர்கள்) விகிதத்தில் அடுத்தகட்ட தேர்வுகளான அசல் சான்றிதழ் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல்தகுதித் தேர்வு, உடல்திறன் போட்டிகள் ஆகியவற்றிற்கு அழைக்கப்படுவார்கள்.
iii. அசல் சான்றிதழ் சரிபார்த்தல் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் உடற்கூறு அளத்தல் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
iv. உடற்கூறு அளத்தல் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் உடல்தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
v. உடல்தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் உடல்திறன் போட்டிக்கு அழைக்கப்படுவார்கள்.
vi. உடல்திறன் போட்டிகளில் தேர்ச்சி பெறுபவர்கள் மொத்த காலிப்பணியிடங்களுக்கு 1:2 (மொத்த காலிப்பணியிட எண்ணிக்கையில் 2 மடங்கு உள்ளவர்கள்) என்ற விகிதாச்சாரப்படி நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

2. மதிப்பெண்கள் பங்கீடு

**A.** பொது விண்ணப்பதாரர்கள்

| வ. எண் | தேர்வுகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | எழுத்துத் தேர்வு | 70 மதிப்பெண்கள் |
| 2 | உடற்திறன் போட்டிகள் | 15 மதிப்பெண்கள் |
| 3 | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள்<br>**(NCC–2 marks, NSS–1 mark, Sports–2 marks)** |
| 4 | நேர்காணல் | 10 மதிப்பெண்கள் |
| மொத்தம் | | **100** மதிப்பெண்கள் |

**B.** காவல்துறைக்கான 20% இட ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்கள்

| வ. எண் | தேர்வுகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | எழுத்துத் தேர்வு | 85 மதிப்பெண்கள் |

| | | |
|---|---|---|
| 2 | சிறப்பு மதிப்பெண்கள் | 5 மதிப்பெண்கள்<br><br>தேசிய அளவிலான காவல்துறையினருக்கான பணித்திறன் போட்டிகளில் (**National Police Duty Meet**)<br><br>தங்கப் பதக்கம் - 5 மதிப்பெண்கள்<br>வெள்ளிப் பதக்கம் - 3 மதிப்பெண்கள்<br>வெண்கலப் பதக்கம் - 2 மதிப்பெண்கள்) |
| 3 | நேர்காணல் | 10 மதிப்பெண்கள் |
| மொத்தம் | | 100 மதிப்பெண்கள் |

3. எழுத்துத் தேர்வு:-

i. 32 மாவட்ட தலைமையிடங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும். விவரங்கள் பிற்சேர்க்கை-IIல் கொடுக்கப்பட்டுள்ளது.
ii. எழுத்துத் தேர்வு ஒரே வினாத்தாள், கொள்குறிவகையில் இருக்கும்.
iii. எழுத்துத் தேர்வுக்கான பாடத்திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**A.** பொது விண்ணப்பதாரர்களுக்கு

i. எழுத்துத் தேர்வுக்கான காலம்: 2 மணி 30 நிமிடங்கள்
ii. குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்: 70 மதிப்பெண்களுக்கு 35% பெறவேண்டும் (25 மதிப்பெண்கள்).

| வ. எண் | தேர்வுக்கான பாடங்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | பொது அறிவு (General Knowledge) | 40 மதிப்பெண்கள் |
| 2 | Logical Analysis, Numerical Analysis, Psychology Test, Communication Skills, Information Handling Ability; | 30 மதிப்பெண்கள் |
| எழுத்துத் தேர்வுக்கான மொத்த மதிப்பெண்கள் | | **70** மதிப்பெண்கள்* |

* 140 கேள்விகள், ஒவ்வொன்றுக்கும் 1/2 மதிப்பெண்.

**B.** காவல்துறைக்கான 20% இட ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு

i. எழுத்துத் தேர்வுக்கான காலம்: 3 மணி நேரம்
ii. குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்: 85 மதிப்பெண்களுக்கு 35% பெறவேண்டும் (30 மதிப்பெண்கள்).

| வ. எண் | தேர்வுக்கான பாடங்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | பொது அறிவு(General Knowledge) | 15 மதிப்பெண்கள் |
| 2 | Communication Skills, Numerical Analysis, Logical Analysis, Information Handling Ability.<br>இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம், காவல்நிலை ஆணைகள் மற்றும் காவல் நிர்வாகம் | 70 மதிப்பெண்கள் |
| மொத்த மதிப்பெண்கள் | | **85** மதிப்பெண்கள்* |

* 170 கேள்விகள், ஒவ்வொன்றுக்கும் 1/2 மதிப்பெண்.

குறிப்பு:-

விண்ணப்பதாரர்களுக்கான எழுத்துத்தேர்வு முடிந்த பின் சரியான பதில்கள் **www.tnusrbexams.net**-ல் வெளியிடப்படும். விண்ணப்பதாரர்களுக்கு கேள்வி மற்றும் பதில்கள் குறித்து ஏதேனும் மேல்முறையீடு செய்ய வேண்டியிருந்தால், சரியான பதில்கள் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் (எழுத்து மூலமாக) உரிய ஆவணங்களுடன் குழுமத்திடம் முறையிட வேண்டும். எழுத்துத்தேர்வின் முடிவுகள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தின் இணையதளத்தில் **www.tnusrbexams.net** வெளியிடப்படும்.

4. அசல் சான்றிதழ் சரிபார்த்தல்-உடற்கூறு அளத்தல் - உடல்தகுதித் தேர்வு - உடல்திறன் தேர்வு

**A.** அசல் சான்றிதழ் சரிபார்த்தல்

சான்றிதழ் சரிபார்த்தலுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம் செய்த அனைத்து அசல் சான்றிதழ்களையும் தவறாது எடுத்து வரவேண்டும். சான்றிதழ் சரிபார்த்தலின்போது அசல் சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறினால் அவர்களது பணிவேட்பு அல்லது அவர்களது வயது தளர்வு, சிறப்பு மற்றும் இன ஒதுக்கீடு கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

**B.** உடற்கூறு அளத்தல்

ஆண்களுக்கான உடற்கூறு அளத்தல் தேர்வில் உயரம் மற்றும் மார்பளவு அளக்கப்படும். பெண்களுக்கான உடற்கூறு அளத்தல் தேர்வில் உயரம் மட்டும் அளக்கப்படும்.

**a) <u>ஆண்கள்</u>:-**

| உயரம் | |
|---|---|
| பொதுப்பிரிவினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | குறைந்தபட்சம் 170 செ.மீ |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் | குறைந்தபட்சம் 167 செ.மீ |
| மார்பளவு | |
| (i) சாதாரண நிலையில்<br>(ii) விரிவடைதல் | குறைந்தபட்சம் 81 செ.மீ<br>குறைந்தபட்சம் 5 செ.மீ |

**b)**பெண்கள்**:-**

| உயரம் | |
|---|---|
| பொதுப்பிரிவினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | குறைந்தபட்சம் 159 செ.மீ |
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் | குறைந்தபட்சம் 157 செ.மீ |

குறிப்பு:-

i. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவத்தினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு கிடையாது.

ii. காவல்துறைக்கான 20% இட ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடற்கூறு அளத்தல் தேர்வு கிடையாது.

iii. உடற்கூறு அளத்தலின் அளவு, அருகில் உள்ள முழுஎண் அல்லது அருகிலுள்ள 0.5 செ.மீ அளவாக எடுத்துக்கொள்ளப்படும்.

iv. ஆண் விண்ணப்பதாரர்கள் உடற்கூறு அளத்தல் தேர்வில் உயரம் அல்லது மார்பு அளத்தலில் அதிருப்தி இருந்தால் Sub – Committee Chairman வசம், மறு அளத்தலுக்கு மேல் முறையீடு செய்யலாம். அதேபோல் பெண் விண்ணப்பதாரர்கள் உயரம் அளத்தலில் அதிருப்தி இருந்தால் Sub – Committee Chairman வசம் மேல் முறையீடு செய்யலாம்.

v. விண்ணப்பதாரர்கள் உடற்கூறு அளத்தல் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின் உடல்தகுதித் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள்.

**C.** உடல்தகுதித் தேர்வு:-

**i.** பொது மற்றும் காவல்துறைக்கான 20% இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்:-

ஆண்கள் :- 1500 மீட்டர் தூரத்தை 7 நிமிடங்களுக்குள் ஓடி முடிக்க வேண்டும்.

பெண்கள் :- 400 மீட்டர் தூரத்தை 2 நிமிடம் 30 வினாடிகளுக்குள் ஓடி முடிக்க வேண்டும்.

**ii.** முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர்:-

1500 மீட்டர் தூரத்தை 8 நிமிடங்களுக்குள் ஓடி முடிக்க வேண்டும்.

iii. இத்தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பப்பதாரர்கள் மட்டுமே உடல்திறன் தேர்வுக்கு அனுப்பப்படுவார்கள்.

**D.** உடல்திறன் போட்டி:-

**a)** ஆண்கள்:-

| வ. எண் | நிகழ்வுகள் | நிகழ்வுகள் | ஒரு நட்சத்திரம் (2 மதிப்பெண்கள்) | இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்) |
|---|---|---|---|---|
| 1 | கயிறு ஏறுதல் | கயிறு ஏறுதல் | 5.0 மீட்டர் | 6.0 மீட்டர் |
| 2 | நீளம் தாண்டுதல் (அ) உயரம் தாண்டுதல் | நீளம் தாண்டுதல் | 3.80 மீட்டர் | 4.50 மீட்டர் |
| | | உயரம் தாண்டுதல் | 1.20 மீட்டர் | 1.40 மீட்டர் |
| 3 | ஓட்டம் 100 மீட்டர் (அ) 400 மீட்டர் | 100 மீட்டர் | 15.00 வினாடிகள் | 13.50 வினாடிகள் |
| | | 400 மீட்டர் | 80.00 வினாடிகள் | 70.00 வினாடிகள் |

குறிப்பு:-

i. ஆண் விண்ணப்பதாரர்கள் கயிறு ஏறுதல் நிகழ்வில் கண்டிப்பாகக் கலந்துக் கொள்ள வேண்டும். இவர்கள் கைகளை மட்டுமே உபயோகித்துக் கயிறு ஏற வேண்டும். கயிறு ஏறும் போது கால்களை உபயோகப்படுத்தினால் போட்டியில் இருந்து தகுதியிழப்பர்.
ii. நீளம் தாண்டுதல் (அ) உயரம் தாண்டுதல் நிகழ்வில் விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக எற்றுக்கொள்ளப்படும்.
iii. கயிறு ஏறுதல், 100 மீட்டர் (அ) 400 மீட்டர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.
iv. ஒவ்வோறு நிகழ்விலும் விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் ஒரு நட்சத்திரம் எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் போட்டியிலிருந்து தகுதியிழப்பர்.
v. விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்சம் 3 நட்சத்திரங்கள் (6 மதிப்பெண்கள்) எடுத்தால் தான் அடுத்த நிலைக்குச் செல்ல முடியும். விண்ணப்பதாரர்கள் அதிகபட்சமாக 6 நட்சத்திரங்கள் (15 மதிப்பெண்கள்) எடுக்கலாம்.

**b)** பெண்கள்:-

| வ. எண் | நிகழ்வுகள் | நிகழ்வுகள் | ஒரு நட்சத்திரம் (2மதிப்பெண்கள்) | இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்) |
|---|---|---|---|---|
| 1 | நீளம் தாண்டுதல் | நீளம் தாண்டுதல் | 3.0 மீட்டர் | 3.75 மீட்டர் |
| 2 | குண்டு எறிதல் (அ) கிரிக்கெட் பந்து எறிதல் | குண்டு எறிதல் | 4.25 மீட்டர் | 5.50 மீட்டர் |
| | | கிரிக்கெட் பந்து எறிதல் | 17 மீட்டர் | 24 மீட்டர் |
| 3 | ஓட்டம் 100 மீட்டர் (அ) 200 மீட்டர் | 100 மீட்டர் | 17.50 வினாடிகள் | 15.50 வினாடிகள் |
| | | 200 மீட்டர் | 38.00 வினாடிகள் | 33.00 வினாடிகள் |

குறிப்பு:-

i. பெண் விண்ணப்பதாரர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் கண்டிப்பாக கலந்துக் கொள்ள வேண்டும்.
ii. நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் / கிரிக்கெட் பந்து எறிதல் நிகழ்வில் விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.
iii. 100 மீட்டர் (அ) 200 மீட்டர் நிகழ்வில் ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.
iv. ஒவ்வோறு நிகழ்விலும் விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் ஒரு நட்சத்திரம் எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் போட்டியில் இருந்து தகுதியிழப்பர்.

**d)** முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்தியத் துணை இராணுவப்படையினர்:-

| வ. எண் | நிகழ்வுகள் | நிகழ்வுகள் | ஒரு நட்சத்திரம் (2 மதிப்பெண்கள்) | இரு நட்சத்திரங்கள் (5 மதிப்பெண்கள்) |
|---|---|---|---|---|
| 1 | குண்டு எறிதல் | குண்டு எறிதல் (7.26 kg) | 5.0 மீட்டர் | 6.0 மீட்டர் |
| 2 | நீளம் தாண்டுதல் (அ) உயரம் தாண்டுதல் | நீளம் தாண்டுதல் | 3.25 மீட்டர் | 4.50 மீட்டர் |
| | | உயரம் தாண்டுதல் | 0.90 மீட்டர் | 1.40 மீட்டர் |
| 3 | ஓட்டம் 100 மீட்டர் (அ) 400 மீட்டர் | 100 மீட்டர் | 17.00 வினாடிகள் | 13.5 வினாடிகள் |
| | | 400 மீட்டர் | 85.00 வினாடிகள் | 70.00 வினாடிகள் |

குறிப்பு:-

i. முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய துணை இராணுவப்படையினர் எல்லா நிகழ்வுகளிலும் கண்டிப்பாகப் பங்கேற்க வேண்டும்.
ii. குண்டு எறிதல், நீளம் தாண்டுதல் அல்லது உயரம் தாண்டுதல் நிகழ்வுகளில் விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எந்த அளவு அதிகமோ அது தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.
iii. 100 மீட்டர் (அ) 400 மீட்டர் ஓட்ட நிகழ்வில் ஒரு வாய்ப்பு மட்டும் வழங்கப்படும்.
iv. ஒவ்வொறு நிகழ்விலும் விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் ஒரு நட்சத்திரம் எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் போட்டியில் இருந்து தகுதி இழப்பார்.
v. விண்ணப்பதாரர்கள் குறைந்த பட்சம் 3 நட்சத்திரங்கள் (6 மதிப்பெண்கள்) அல்லது அதிகபட்சமாக 6 நட்சத்திரங்கள் (15 மதிப்பெண்கள்) எடுக்கலாம்.

**e) 20%** காவல்துறையினருக்கான ஒதுக்கீடு:-

20% காவல்துறையினருக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு உடல்திறன் தேர்வு கிடையாது.

5) நேர்காணல் :-

நேர்காணல் தேர்வு இக்குழும தலைமையிடத்தில் நடைபெறும். நேர்காணல் தேர்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்காணலுக்கு வரும் பொழுது அனைத்து அசல் சான்றிதழ்களையும் எடுத்து வரவேண்டும். மத்திய மற்றும் மாநில அரசில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் (காவல்துறைக்கான ஒதுக்கீடு தவிர) நேர்காணலுக்கு வரும் பொழுது அவர்களது அலுவலகத்திலிருந்து "தடையில்லா சான்றிதழ்" பெற்று சமர்ப்பிக்கவேண்டும். சிறப்பு மதிப்பெண்கள் பெற விழையும் விண்ணப்பதாரர்கள் தேசிய மாணவர்படை/ நாட்டு நலப்பணித்திட்டம்/ விளையாட்டு ஆகியவற்றின் அசல் சான்றிதழ் மற்றும் ஒரு நகலினை நேர்காணலின்போது கொண்டு வரவேண்டும். தேசிய காவல் துறையினருக்கான பணித்திறன் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள் அசல் சான்றிதழ் மற்றும் ஒரு நகலை நேர்காணலின்போது கொண்டு வரவேண்டும்.

6) சிறப்பு மதிப்பெண்கள் :-

பொது ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் தேசிய மாணவர்படை, நாட்டு நலப்பணித்திட்டம், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டமைக்கு வழங்கப்படும். காவல்துறைக்கான ஒதுக்கீட்டு விண்ணப்பதாரர்களுக்கு தேசிய காவல் துறையினருக்கான பணித்திறன் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும். பிற்சேர்க்கை-IIIல் காண்க.

தற்காலிகத் தெரிவுப் பட்டியல்:-

a. விண்ணப்பதாரர்கள், எழுத்துத்தேர்வு, உடல்திறன் தேர்வு, நேர்காணல் மற்றும் சிறப்பு மதிப்பெண் வாங்கிய மொத்த மதிப்பெண்கள் மற்றும் வகுப்புவாரி விகிதாச்சார அடிப்படையில் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.
b. ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால், வயது மூப்பு அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.
c. ஒரே தகுதி மதிப்பெண் பெறும் விண்ணப்பதாரர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுள் எவரொருவர் சாரணர் இயக்கத்தில் பங்கு பெற்று மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் சான்றிதழைப் பெற்றுள்ளாரோ அவருக்கு பதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும்.
d. விண்ணப்பதாரர்கள் காவல்துறைக்கான இடஒதுக்கீடு மற்றும் பொது ஒதுக்கீட்டிலும் தேர்வு பெற்றால் அவர் காவல்துறைக்கான இடஒதுக்கீட்டின்கீழ் மட்டுமே தேர்வு பெற்றவாராக கருதப்படுவார்.
e. இளங்கலைப் பட்டப்படிப்பைத் தமிழ்வழி பயின்றிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மொத்தக் காலியிடங்களில் 20% முன்னுரிமை அளிக்கப்படும்.
f. இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணைய தளத்தில் **www.tnusrbexams.net** வெளியிடப்படும்.

7) மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணை:-

தற்காலிகத் தெரிவுப் பட்டியலில் தேர்வு செய்யப்படுபவர்கள் மருத்துவப் பரிசோதனை மற்றும் முந்தைய பழக்கவழக்கங்கள் மற்றும் குணநலன்கள் குறித்த விசாரணைக்கும் காவல்துறை மூலமாக உட்படுத்தப்படுவார்கள்.

**8)** விபத்து :-

பல்வேறு நிகழ்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல் பாகங்களில் பாதிப்பு மற்றும் காயங்களுக்கு அரசோ, காவல்துறையோ, தேர்வுக் குழுமமோ பொறுப்பேற்காது.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை-02.